உ

கடவுள் துணை.

சுப்பிரமண்யசுவாமிபேரில்

# சரஹணபவாநந்தமாலை.



## திருப்போரூர்
## டி. கோபால் நாயகர்
## அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

சுப்பிரமணியக்கடவுள்பேரில்

# சரஹணபவாநந்தமாலை.

## காப்பு.

முப்பொருளாகியொன்றாய் முடிந்திடுஞ்சோதியான
அப்பனுக்குபதேசித்த அருமுகக்கடவுளென்னுந்
தற்பரானந்தகந்த சாமிசற்குருவைப்பாட
எப்பொருள்தனக்கும்வல்லோனிணையடிகாப்பதாமே.

## பதிகம்.

ஆதியாமூலக் கணேசனடிபோற்றியே
ய்யன்மால்தனைப்பணிந்து
அக்கினியனாகத் ருத்திரமூர்த்தியை
யன்புடன்போற்றிசெய்து
நீதியாய்வாளு மயேஸ்பரன்பொன்னடியை
நேசமாய்த்தெண்டனிட்டு
நெத்திநடுமத்திதனி லாக்கினையின்வட்டத்தில்
நிர்மலசதாசிவத்தின்
பாதமலர்போற்றிஅம் பரவெளியிலொளியான
பரவிந்துநாதமதனை
பாங்குடன்போற்றிப் பணிந்தடுமையான
பரப்பிர்மவேலர்பதமே

தாதரவெனுந்தொழுவே னையனேமோன மருள்
தரவேண்டும் துசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய் வந்தகுருவே. (க)
சித்தாபுகழ்தென்பரங் குன்றமதில்வாசனே
தெய்வானைமணநேசனே
சென்னியோராறுபுகழ் பன்னிருகைவேலனே
தேவர்கட்கனுகூலனே
முத்தர்புகழ்மெஞ்ஞான முத்திக்கிவித்தான
முருகனே திருமருகனே
மூதண்டகூடமு கடாய்நின்றகுமரகுரு
மூர்த்தியேகார்த்திகேயா
சுத்தர்புகழ்பொற்கடம் பணியுமணிமார்பனே
துய்யவெண்ணீற்றமெய்யனே
துரியங்கடந்து அம் பரவெளியிலொளியாய்த்
துலங்கும்பரப்பிர்மமே
சத்தரிஷியோர்புகழு முத்தனேமோனமருள்
தரவேண்டுமிது சமையமே
சரஹணபவானந்த வரமருளவேகந்த
சாமியாய் வந்தகுருவே. (உ)
மறைநாலுமோலமிட் டறியாதபிர்மமெனு
மாசற்றஞான அதிதா
மாலயன்தேடியுங் காணாதசிவனுக்கு
மவுனகுருவானநாதா
குறையொன்றிலாமலே நிறைவாகயெங்கினும்

குடிகொண்டிருந்தகந்தா
கொம்புநுனிமேலம் பரத்தினிற்சம்புவின்
கூடநடனம்புரிந்த
பறைவாலையருள்பெத்த துரைசிலமுத்தனெ
பன்னிருகரச்சித்தனே
பாலனுனதடிமைபான் காலன்றனக்குமே
பயந்துன்னைவந்தடைந்தேன்
தறைமீதிலென்னைநீ தற்காத்துமோனமருள்
தரவேண்டுமிது சமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய் வந்தகுருவே. (௩)
ஆனந்தவாசிமயி லேறிவிளையாடிவரும்
அருமுகக்கடவுளுந்தன்
அருளினலண்டபகி ரண்டமும்விளங்கிடுவ
தன்றிவேறொன்றுமிலையே
மோனந்தமானகுரு முத்திக்கிவித்தாக
மூலத்திலாதாரமாய்
முச்சுடருமாகியே அச்சுடரு மொன்றாய்
முடிந்தவேதாந்தமென்னும்
வானந்தமானபர வெளியிலொளியாய்நின்ற
மாசிலாஞானமூர்த்தி
மலரடியேகெதியென்று நிலவரமாய்நம்பினேன்
வன்பிறவிமாற்றுதற்கு
தானந்தமாயென்னை நீ தற்காத்துமோனமருள்
தரவேண்டுமிது சமையமே

சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே. (௪)
வஞ்சியர்மயக்கத்தில் நஞ்சுண்டமீன்போல்
மயங்குமாபாவியெந்தன்
மனதரிவைவிட்டுப் பிரிந்தவுடனேயடுமை
வலேயிலகப்பட்டமான்போல்
அஞ்சியேகவலேகுடி கொண்டுதுன்பத்தினி
லழுந்திமிகவேமெலிந்து
அடிமையான்பட்டசள மறையவென்றுற்புவியி
லாதிசேடனுலாகுமோ
விஞ்சைமுனிவோர்சித்தர் போற்றுமெய்ப்பாதனே
விமலனுக்கருள்போதனே
வேதவேதாந்தனே நாதாந்தநீதனே
மெஞ்ஞானமூர்த்திநீயென்
சஞ்சலமகற்றியென் றனேயரியமோனமருள்
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்தவரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே. (௫)
பதிறுறுவயதுழுதலப் பாலபருவமாம்
பயனறிவுதோன்றிடாதாம்
பக்குவமாய்முப்பத்தி ஞன்குபென்றுனபின்
பலநினவுசுகதுக்கமாம்
விதிவயதுநூரிலன் பதுவயதுநித்திரையில்
வீண்பாழதாய்ப்போகுமாம்
வேதநூல்பாற்காயுள் ளில்லேமெஞ்ஞானகுரு

மெல்லடியே பின்செல்லென்றும்
மதிபெருகுதென்பொதிகை மாமுனிவரிப்படி
வளுத்திஞர்பரிபாஷையில்
வடிவேலெனக்குமெஞ் ஞானகுருநீயென்று
மலரடியைவந்தடைந்தேன்
சதிராகநடனமிடு பாதனேமோனமருள்
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே (சா)
ஆனுலுயெந்தனைப் போலவேமாபாவி
யவனியிற்கண்டதில்லை
அன்யாயமென்கொடுமை யாருடன்கூறுவேன்
அறுமுகனேகேட்டருளுவாய்
ஊனுனகும்பிக்கி யிரைதேடியேவுண்
டுரங்கிப்பின்னந்தமுறையே
ஓயாமலேசரு கரிப்பதல்லாற்குளி
ருடன்காயநேரமில்லையே
கோனுனகுமரகுரு நாதனேயெந்தனுட
கும்பிய துதானிரம்பக்
குதிகொண்டுவெளிபோர மதியென்றஅமுர்தங்
குடித்துச்சுகித்திருக்க
தானுவுனைத்தொழுவே னையனேமோனமருள
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே (எ)

திருவுள்ளமூர்த்தியுன தடிமையான்மித்த
செனமமெத்தனைகோடியோ
தெய்வமேநின்னரு ளிரங்கினலென்னுடைய
செனனமரணந்தீருமே
கருவில்வளர்மூர்த்திநீ வுள்ளும்புறமுமாய்
காசினியெலாம்நிறைந்து
ககனவெளியண்டபகி ரண்டமும்நிறைந்திடுங்
கர்த்தனேநின்பத்தன்யான்
சிறுமையவகீர்த்திசெயும் வன்பிரவினையால்
திடுக்கிட்டுமிகநடுங்கி
சிவசுப்பிரமண்யமே செதியென்றுபிறவினைய்
தீரவுனைவந்தடைந்தேன்
தருமகுருமூர்த்தியென் றனையரியமோனமருள்
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே. (அ)
அம்புவியிலுண்டான சீவவுயிர்யாவுமுனை
யன்றிவேறொன்றுமிலையே
அவரவர்கள்செய்கின்ற கர்மங்களுக்குவுண்
டானபலனைக்கொடுக்கும்
தெம்புடையவல்லகுரு தேசிகநீயாகையால்
செனனமெனப்பிரவிதீர
சித்தமதுகந்திடக் கொத்தடிமையாகநின்
திருவடியை வந்தடைந்தேன்
உம்பர்பணிபாதனே அம்புமிதுபோதனே

ஓம்நமசிவாயகுருவே
உனைவந்தடைந்தடிமை செனனமரணந்தனை
வொளிக்கும்படிக்கெனக்கு
தம்பமெனநடுவணையில் மனம்நிற்கமோனமருள்
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே. (சு)
சித்தருடனே முனிவர் மெத்தவாளும்பரம
தேசமாஞ்சதுரகிரியில்
சின்மயமேதானன சட்டைமுனியாருடைய
சிஷர்கந்தரநகர்தனில்
சுத்தமுடனேவளா சாலிமாரிஷிகுலந்
துலங்கவே உதித்தெளுந்து
சுப்பிரமண்யக்கடவுள் பொற்பாதவிந்தமே
துணையென்று வுருதிகொண்ட
உத்தமனும்வைகுண்ட ராமதாசன்வாலை
உத்தண்டர்வேலர்மீதில்
ஓங்கும்புகழ்சரஹண பவாநந்தமாலையா
யுரைசெய்தேன்வாணியருளால்
சத்தியமாய்நின்னடிமை முத்திபெரமோனமருள்
தரவேண்டுமிதுசமையமே
சரஹணபவாநந்த வரமருளவேகந்த
சாமியாய்வந்தகுருவே. (ரு)

முற்றிற்று.